IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 68 /2012

Deposition of witness for DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Caste | : - |
| Father's Name | : கங்காதரன் | Calling | : - |
| Village | : கெர்கேரி கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : காட்பாடி | Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5 day of September, 2019.

Cross Examination Continuation by plaintiff

ரவிக்கு இந்த வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து எனக்கு சொந்தம் என்பதை காட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்ற தீர்ப்பாணையை தாக்கல் செய்துள்ளேன். தீர்ப்பாணையில் எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்து என்று சொல்லியுள்ளார்கள். எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்து என்ற விவரத்தை காட்டும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு பதிவு செய்த ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர்கள் 8 பேர்களுக்குள் ஏதாவது பாகப்பிரிவினை ஏற்பட்டு அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த தீர்ப்பாணை தான் ஆவணம் ஆகும். 8 பேருக்கும் பாத்தியப்பட்டதாக தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ளதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள 7 செண்ட் நிலத்திற்கு எவ்வாறு பாத்தியம் என்று சொல்லியுள்ளேனா என்றால் பூர்வீக பாத்தியம் என்று சொல்லயுள்ளேன். எனது தகப்பனாருக்கு முன் தாவா சொத்து எனது தாத்தா கிருஷ்ணமந்திரி மற்றும் பாட்டி கன்னியம்மாளுக்கு பாத்தியம். அவர்கள் பெயரில் ஏதாவது இருந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

தீர்ப்பாணையை தாக்கல் செய்துள்ளேன். தீர்ப்பாணையை தவிர வேறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு ஆணங்கள் எதுவும் என்வசம் இல்லை என்றும் அதனால் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனார் கங்காதரனுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டும் ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை தீர்ப்பாணையை தாக்கல் செய்துள்ளேன். சாட்சி தற்பொழுது எந்த ஆவணங்களையும் எனது தகப்பனார் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். தாவா சொத்தில் கூரை வீடு இருந்ததா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த கூரை வீட்டில் நான், எனது அப்பா வசித்து வந்தோம். அந்த வீட்டை நானும், ரவியும் இடித்துவிட்டோம் என்றால் சரியல்ல இயற்கை சீற்றத்தால் இடிந்துவிட்டது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது சகோதரர் முரளியும் அந்த கூரை வீட்டை இடித்ததால் எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. என்மீதும், முரளிமீதும் அடையாளம் தெரியாத ஆட்கள் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 23.03.2012-ல் நானும், எனது சகோதரர் மீதும் வீட்டை இடித்ததாக மேல்பாடி காவல்நிலைய குற்ற எண்.152/2012 இதச 147, 341 மற்றும் 506(2) பிரிவுகளின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சாதான். நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தாவா சொத்தில் உள்ள இரண்டு புளிய மரங்களை வெட்டியதாக என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தாவா சொத்தில் உள்ள வீட்டில் நான் வாடகைக்கு இருந்ததாக மார்கபந்து என்பவர் சாட்சியம் அளித்தள்ளார் என்றால் அதுபொய்சாட்சி. எனது தந்தை வீட்டில் குடியிருந்து கொள்ள ஆஞ்நேயன் என்பவரிடம் அனுமதி கேட்டார் என்றும், அந்த அனுமதியின பேரில் வீட்டில் குடியிருக்க ஆஞ்சநேயர் அனுமதித்தார் என்றால் சரியல்ல. அசல் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யாமல் நிதிமன்ற தீர்ப்பாணையை மட்டும் அடிப்படையாக கொண்டு தாவா சொத்தில் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. என் தந்தையார்

பெயரிலோ, எங்களது பெயரிலோ ஆவணங்கள் இல்லை என்றும் அதனால் அதை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் உள்ள 7 செண்டிற்கு சக்குபந்தி விவரங்கள் பொன்னை முதல் திருவலம் நெடுஞ்சாலைக்கும் கிழக்கு, பரிமளா ஆஞ்சநேயர் நிலத்திற்கு தெற்கு மேற்கு, கதிர்வேல், எத்திராஜ் நிலத்திற்கு வடக்கு ஆகும். ஆஞ்சநேயர் இறந்த பிறகு வாதிக்கு உரிமை ஏற்பட்டுள்ளது என்றும், எங்களுக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.